**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 268/2017**

Prosecution witness : 2

| | | | |
|---|---|---|---|
| Name: | ஞானசேகரன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused Present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 12.03.2026

**முதல் விசாரணை**:

நான் தற்போது ஈரோடுமாவட்டம் சத்தியமங்கலம் தாலுகா,புளியம்பட்டி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 27.02.2017ம் தேதி பகல் 12.45 மணிக்கு மதுரை போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது 13.00 மணிக்கு ரகசிய தகவலாளி நிலையம் ஆஜராகி கொடுத்த தகவலை பெற்று தனி தாளில் எழுதி, காவல் ஆய்வாளர் அவர்களின் அனுமதிக்கு அனுப்பிவைத்தேன். 13.30 மணிக்கு பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து பின்னர், தலைமைக்காவலர்-660, தலைமைக்காவலர்-3424 மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் இசக்கி ஆகியோருடன் தக்க உபகரணங்களுடன் ரகசிய தகவலாளியை அழைத்துக்கொண்டு மதுரை மாவட்டம் மாவிலிபட்டி கிராமத்திற்கு சென்று 14.15 மணிக்கு ரகசிய தகவலாளி கூறிய இடத்திலிருந்து வந்த போதைப்பொருள் சம்பந்தமாக கண்காணித்து கொண்டிருந்தபோது 14.30 மணிக்கு ரகசிய தகவலாளி அடையாளம் காட்டி

மறைந்தவுடன் வீட்டிலிருந்து வெளியே வந்த நபரை பிடித்து எங்களின் சுய விபரம் தெரிவித்து, அடையாள அட்டையை காண்பித்து அவரை விசாரிக்க ஆண்டி, த/பெ.சுப்பையா, மாவிலிபட்டி, மதுரை மாவட்டம் என தெரிவிததார். அவரிடம் கஞ்சா என்ற போதைப்பொருள் வைத்திருப்பதாக தகவல் உள்ளது. உங்களையும், உடைமையையும் சோதனை செய்ய வேண்டும். நீங்கள் விரும்பினால் அருகில் உள்ள நீதித்துறை நடுவர் அவர்களிடமோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்ய உரிமை உள்ளது என தெரிவித்தேன். அதற்கு ஆண்டி அவ்வாறு அங்கு செல்லவேண்டாம் எனவும் காவல்துறையினரே சோதனை செய்ய சம்மதம் தெரிவித்தார். அந்த இடத்தில் பொது ஜனசாட்சியம் யாரும் இல்லாததால் காவல்துறையினரே சாட்சியாக நியமித்து சோதனை சம்மத கடிதம் தயார் செய்து அதை படித்து காட்டி எதிரியிடம் கையொப்பம் பெற்று, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று நானும் கையொப்பம் செய்தேன். பின்னர் அவர் வைத்திருந்த பாலிதீன் பையை சோதனை செய்து பார்க்க இலை, தழைகள் மற்றும் கதிர்களுடன் கூடிய கஞ்சா என்ற போதைப்பொருள் இருந்தது. அது பற்றி விசாரிக்க மேற்படி ஆண்டி எவ்வித ஆசை வார்த்தையோ, துன்புறுத்தலோ இன்றி தாமாக கொடுக்க முன் வந்த ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார். காவல் துறையினரை சாட்சியான நியமித்து, சாட்சிகளிடமும், எதிரியிடமும் கையொப்பம் பெற்று நானும் கையொப்பம் செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்கு மூலத்தில் ஆந்திரா சென்று விற்பனைக்காக 5கிலோ கஞ்சா வாங்கி வந்ததாகவும் தற்போது விற்பனை செய்ய சென்றபோது காவல்துறையினர் பிடித்துகொண்டதாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பையில் இருந்த

கஞ்சாவை எடுத்து ஆஜர் செய்தார். அதை நாங்கள் கொண்டுசென்ற தராசில் எடைபோட்டு பார்க்க சுமார் 5கிலோ இருந்தது. பின்னர் அதிலிருந்து தலா 50கிராம் வீதம் மாதிரி மற்றும் பகுப்பாய்வுக்காக இரண்டு காக்கி கவரில் மேற்படி கஞ்சாவை எடுத்து விபர சிலிப் எழுதி சாட்சிகள் மற்றும் ஆண்டியிடம் கையொப்பம் பெற்று நானும் கையொப்பம் செய்தேன். பின்னர் நூலால் தனித்தனியே கவரில் கட்டி, விபர சிலிப் ஒட்டி S1, S2 என குறியீடு செய்தேன். மீதம் இருந்த 4கிலோ 900 கிராம் கஞ்சாவை நூலால் கட்டி என்ஐபி சிஐடிசீல் வைத்து விபரசிலிப் ஒட்டினேன். S1, S2 மாதிரிகளுக்கு என்ஐபி சிஐடி எம்டியூ என சீல் வைத்து காவல் துறைசாட்சிகள் முன்னிலையில் 15.45 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றி ஆண்டியிடம் கையொப்பம் பெற்று, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று நானும் கையொப்பம் செய்து நகல் வழங்கினேன். பின்னர் 16.15 மணிக்கு எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி 5கிலோ கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக ஆண்டி என்பவருக்கு கைது அறிவிப்பு தயார் செய்து சாட்சிகள் மற்றும் ஆண்டியிடம் கையொப்பம் பெற்று நானும் கையெழுத்து செய்து எதிரியை கைது செய்து சொத்துக்களுடன் நிலையம் வந்து 41/2017 பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B)NDPS ACT ன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை உசிலம்பட்டி கனம் JM II அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். எதிரி ஆண்டி மற்றும் சொத்துக்கள் வழக்கு ஆவணங்களை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். அத்தாட்சி **அ.சா.ஆ.2** ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.3** ஆகும். கைது அறிவிப்பு **அ.சா.ஆ.4** ஆகும். படிவம்-91 **அ.சா.ஆ.5** ஆகும். முதல்

தகவல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும். பிரிவு 57ன் படியான விரிவான அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும்.

**குறுக்கு விசாரணை**

ஆவணங்களை எழுதியதன் அடிப்படையில் தான் ஆய்வாளர் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். தகவல் வந்த நேரத்தில் நிலையத்தில் காவல் ஆய்வாளர் இருந்தாரா என்றால் இல்லை வெளிஅலுவலில் இருந்தார். தகவலை ஆவணங்கள் அடிப்படையில் தொலைபேசி மூலம் சொன்னதாக குறிப்பிட்ட வாசகம் உள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 4ல் தகவலின் வகை suo motu என உள்ளது என்றால் சரிதான் ரகசிய தகவலாளி கொடுத்த தகவலின் அடிப்படையில் சென்று எதிரி மற்றும் சொத்துக்களை கைப்பற்றி வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவலை சிடியில் பதிந்த எண், வாலிம் குறிப்பிட்டு ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் தகவலை தனி ஆவணமாக பதிந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் போன் மூலம் தகவல் வந்ததாக குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான். போதிய உபகரணம் எடுத்து சென்றதாக கூறப்பட்டுள்ளது என்னென்ன உபகரணம் எடுத்து சென்றதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் விரிவான அறிக்கை கொடுத்தாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் தனி நபர்கள் முன் வரவில்லை என குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் வாங்கிய பின்னர்தான் அத்தாட்சி எழுதப்பட்டது என்றால் சரிதான்.

அத்தாட்சியில் முன் வராத நபர்களின் பெயர் விலாசம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இலை, தழைகளுடன் கூடிய கதிர் இருந்ததாக குறிப்பிட்டு அத்தாட்சியில் வாசகம் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான் கஞ்சா என்று குறிப்பிட்டுள்ளேன். ஆய்வுக்கு சென்று வந்த பின்னர்தான் கஞ்சா என முடிவு செய்யமுடியும் என்றால் சரியல்ல. விபரசிலிப்பில் என்னென்ன குறிப்பிட்டு எழுதினேன் என்றால் சம்பவ இடம், நேரம், தேதி, சாட்சிகளின் விபரம், எதிரியின் விபரம் மற்றும் கையெழுத்து, என்னுடைய கையெழுத்து இருக்கும். அத்தாட்யில் மேற்கண்ட விபரங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். மாவிலிபட்டி தெருவில் எவ்வளவு குடியிருப்புகள் இருக்கும் என்றால் வீடுகள் இருந்து எண்ணிபார்க்கவில்லை. 27.02.2017 முதல் 17.03.2017 வரை சொத்தின் பாதுகாப்பு குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நிலையம் வந்த பின்னர்தான் குற்ற எண் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எந்தெந்த ஆவணங்களை யார் எழுதினார்கள் என குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் என்னுடன் வந்த காவல்துறையினர் எழுதினார். சோதனை சம்மத கடிதம், அத்தாட்சி, கைது நமூனா போன்ற ஆவணங்களை காவலர் இன்பபாண்டியன் எழுதினார். ஒப்புதல் வாக்குமூலம் சிறப்பு சார்பு ஆய்வாளர் இசக்கி எழுதினார். திரும்ப நிலையம் வந்தபோது காவல் ஆய்வாளர் நிலையத்தில் இருந்தாரா என்றால் வெளி அலுவலில் இருந்தார் தகவல் தெரிவித்தபின்னர் வந்தார். நான் சொன்னதுபோல் எந்த தகவலும் வரவில்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் நானோ என்னுடன் காவலர்கள் யாரும் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றாலும் சம்பவஇடத்தில் எதிரியை

பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அவரிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்களை காவல்நிலையத்தில் தயார் செய்து எதிரியை மிரட்டி கையொப்பம் பெற்றோம் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு
செய்யப்பட்டு வாசித்துக்காட்ட சாட்சியால் சரி
என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.